
07.ஜூலை.2022 பக்கங்கள்- 02




தினப்புயல்
PIN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-02 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 73



## இன்றைய வானிலை முன்னறிவிப்பு

சப்ரகமுவ மாகாணம் மற்றும் நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களில் அவ்வப்போது மழை பெய்யக்கூடும். மேல் மற்றும் வடமேற்கு மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பல தடவைகள் மழை பெய்யும். மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும், தென் மாகாணத்திலும் அவ்வப்போது காற்று (40-50) கி.மீ வரை பலத்த காற்று வீசக்கூடும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.


இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற் காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

(வளிமண்டலவியல் திணைக்களம்)

## எரிபொருள் கப்பல்கள் தொடர்பான அறிவிப்பு

அவசரமாக இறக்குமதி செய்ய வேண்டிய எரிபொருள் கப்பல்களுக்கு அதிக பணம் செலுத்த வேண்டியுள்ளதாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர நேற்று (06) பாராளுமன்றத்தில் தெரிவித்தார். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஐஓசி நிறுவனம் எங்களுக்கு வழங்கிய முதல் பெட்ரோல் கப்பல் வரும் 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் வரும். (02 ஆம் பக்கம் பார்க்க...)





## ஈரான் அரசு அதிரடி

ஈரானை அணுசக்தி ஒப்பந்தத்தில் மீண்டும் சேர்ப்பதற்கான முயற்சியை அதிபர் ஜோ பைடன் மேற்கொண்டார். இதற்கான பேச்சுவார்த்தை கத்தார் தலைநகர் தோஹாவில் நடைபெற்றது. அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷியா, பிரான்ஸ், சீனா, ஜெர்மனி ஆகிய நாடுகளுடன் ஈரான் கடந்த 2015-ம் ஆண்டு அணுசக்தி ஒப்பந்தம் செய்து கொண்டது. ஈரான் அணு உலைகளில் யுரேனியம் செறிவூட்டல் திறன், செறிவூட்டல் நிலை, கையிருப்பு ஆகியவற்றை கட்டுக்குள் வைக்கவும், நட்டான்ஸ் நகரைத் தவிர்த்து பிற இடங்களில் யுரேனியம் செறிவூட்டும் மையம் அமைப்பதை தடுக்கவும் இந்த ஒப்பந்தம் வகை செய்தது.

(02 ஆம் பக்கம் பார்க்க...)

## இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிவிப்பு

மத்திய வங்கியின் நிலையான வைப்பு வசதி வீதம் (SDFR) மற்றும் நிலையான கடன் வசதி வீதம் (SLFR) ஆகியவற்றை அதிரிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை கூட்டத்தில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி. நிலையான வைப்பு வசதி வீதம் (SDFR) மற்றும் நிலையான கடன் வசதி வீதங்களை 100 அடிப்படைப் புள்ளிகளால் முறையே 14.50 சதவீதம் மற்றும் 15.50 சதவீதமாக அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதேவேளை. சட்டரீதியான கையிருப்பு விகிதத்தை நிலவும் 4.00% அளவிலேயே பேணுவதற்கு நாணயச் சபை தீர்மானித்துள்ளது.

சமீபகாலமாக எதிர்பார்க்கப்பட்ட பணவீக்கம் எதிர்பார்த்ததை விட அதிகமாக அதிகரித்து வருவதையும். பணவீக்கம் தொடர்ந்து அதிகரித்து வருவதையும் கவனித்த சபை. பாதகமான பணவீக்கத்தை கட்டுப்படுத்த மேலும் நாணயக் கொள்கை நிலைப்பாட்டை கடுமையாக்குவது அவசியம் என்று கருதி இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



## இல்லை, முடியாது என்ற கதை எம்மிடம் இல்லை – சஜித் பிரேமதாஸ

தமக்கோ அல்லது ஐக்கிய மக்கள் சக்திக்கோ அல்லது ஐக்கிய மக்கள் கூட்டணிக்கோ 'இல்லை, முடியாது' என்ற கதைக்கு இடமில்லை என்றும், எந்த தருணத்திலும் மக்களுக்கான தங்கள் பொறுப்புகளை சரிவர நிறைவேற்றுவோம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று (06) தெரிவித்தார்.

நாட்டில் பாரியளவில் மருந்து தட்டுப்பாடு இருக்கும் தருவாயில் டொலர் தட்டுப்பாடே இதற்கு காரணமென பலரது கருத்தாக இருப்பினும், உண்மையான காரணம் என்னவெனில், அதற்கான தகவல் தரவுகளை களஞ்சியப்படுவதிலுள்ள சிக்கலே எனவும், தெரிந்துகொண்டே இதற்கு மேலும் மக்களுக்கு பொய்யுரைக்காமல் தற்போதுள்ள செயல்முறைகளை சரிவர செயற்திறன் மிக்கதாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார். (02 ஆம் பக்கம் பார்க்க...)

## எதிர்ப்பு பேரணிக்கு எதிராக நீதிமன்ற உத்தரவு

கொழும்பில் இன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எதிர்ப்பு பேரணிக்கு எதிராக பொலிஸார் நீதிமன்ற உத்தரவு ஒன்றை பெற்றுள்ளனர்.

பிக்குகள், சர்வமத தலைவர்கள் மற்றும் அதன் உறுப்பினர்கள் ஓல்கோட் மாவத்தையினுள் நுழைவதை தடுக்கும் வகையில் மற்றும் புறக்கோட்டை பகுதிகளில் தங்கியிருந்து பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் நடந்து கொள்வதை தடுக்கும் வகையில் இந்த நீதிமன்ற உத்தரவு பெறப்பட்டுள்ளது.

புறக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியினால் முன் வைக்கப்பட்ட விடயங்களை கருத்திற் கொண்டு கொழும்பு நீதவான் இந்த உத்தரவை வெளியிட்டுள்ளார்.

## ஈரான் அரசு...

இது ஈரான் அணு ஆயுதத்தை தயாரிப்பதை தடுக்க வகை செய்கிறது. இதற்காக ஈரான் மீது மேற்கத்திய நாடுகள் விதித்த பொருளாதார தடைகள் படிப்படியாக விலக்கிக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது.

அமெரிக்க அதிபராக ஒபாமா இருந்தபோது செய்துகொண்ட இந்த ஒப்பந்தத்தில் இருந்து, அடுத்து அதிபராக பொறுப்பேற்ற டொனால்ட் டிரம்ப் விலகினார். தற்போது அதிபர் ஜோ பைடன் மீண்டும் ஈரானை அணுசக்தி ஒப்பந்தத்தில் சேர்க்க முயற்சித்து வருகிறார். இதற்கான பேச்சுவார்த்தை கத்தார் தலைநகர் தோஹாவில் நடந்துவந்தது. இதற்கிடையே ஈரான் தனது அணுசக்தி தளங்களில் சர்வதேச ஆய்வாளர்களின் கண்காணிப்பு கேமராக்களை மூடிவிட்டது. தற்போது ஈரானிடம் அணு ஆயுதம் தயாரிக்கக்கூடிய அளவுக்கு செறிவூட்டப்பட்ட யுரேனியம் கையிருப்பாக உள்ளதாக தகவல்கள் வெளியாகின.

தோஹா பேச்சுவார்த்தை முடிவின்றி முடிந்ததற்காக ஈரானும், அமெரிக்காவும் ஒன்றையொன்று குற்றம் சாட்டின. அணு உலைகளில் அணு ஆயுதம் தயாரிக்க ஈரான் முயற்சித்து வருவதாகவும், இதற்கான சோதனைகளை ஈரான் மேற்கொண்டு வருவதாகவும் தகவல் வெளியானது. இந்நிலையில், தடை செய்யப்பட்ட பகுதியில் இருந்து மண் மாதிரிகளை சேகரித்ததாகவும், உளவு வேலையில் ஈடுபட்டதாகவும் டெஹ்ரானில் செயல்பட்டு வரும் இங்கிலாந்து தூதரகத்தின் மூத்த அதிகாரி மற்றும் சில வெளிநாட்டினரை ஈரான் புரட்சிப் படையினர் கைது செய்தது உலகளவில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

## எரிபொருள் கப்பல்கள்...

இந்த நாட்டிற்கு தேவையான எரிபொருளை குறிப்பிட்ட நிறுவனம் ஒன்றிடம் இருந்து இம்மாதம் 13ஆம் திகதிக்குள் கொண்டு வருவதற்கு அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் குழு நேற்று இரவு எமக்கு அனுமதி வழங்கியுள்ளது.

ஆனால் பிரச்சினை என்னவென்றால், அவர்கள் நாங்கள் வழமையாக பெறும் விலையை விட அதிக விலையை முன்வைத்துள்ளனர். அந்த நிறுவனத்திற்கு தேவையான முன்பணத்தை இன்று செலுத்துகிறோம். வரும் 15ம் திகதி கப்பல் எங்கள் நாட்டிற்கு கிடைக்குமென நம்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.


## மேலும் இரு இலங்கை வீரர்களுக்கு கொரோனா தொற்று

இலங்கை டெஸ்ட் அணியின் சகலதுறை வீரர் தனஞ்சய டி சில்வா மற்றும் சுழற்பந்து வீச்சாளர் ஜெஃப்ரி வென்டர்சே ஆகியோர் கொவிட்-19 தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதன்படி, நாளை (08) ஆரம்பமாகவுள்ள அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் போட்டியில் இருந்து அவர்கள் நீக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

சுற்றுலா அவுஸ்திரேலியா அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கட் போட்டி காலி மைதானத்தில் நாளை ஆரம்பமாகவுள்ளது. நேற்று நடத்தப்பட்ட உடனடி என்டிஜென்ட் சோதனையின் போது, இருவருக்கும் கொவிட்-19 தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, அவர்கள் இருவரையும் 5 நாட்களுக்கு தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, ஏனைய வீரர்கள் மற்றும் துணை ஊழியர்கள் கொவிட் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. முன்னதாக, ஏஞ்சலோ மெத்யூஸ் மற்றும் பிரவீன் ஜெயவிக்ரம ஆகியோருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் தற்போது மெத்யூஸ் பூரண குணமடைந்துள்ளதாகவும், அவர் நாளைய போட்டியில் இணைய வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.




## "இல்லை, முடியாது"...

நாட்டில் நிலவும் மருந்துப் பற்றாக்குறையை போக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், சேனக பிபிலேயின் ஔடத கொள்கையை அமுல்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், கடந்த ஆட்சியில் சுகாதாரத்துறையில் பாரியளவிலான அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

அத்துடன்மருந்துப்பற்றாக்குறைக்குகாரணம்டொலர்தட்டுப்பாடு அல்ல எனவும், நிறுவனங்களுக்கிடையேயான ஒருங்கிணைப்பிலுள்ள குறைப்பாடும் தொடர் கண்காணிப்பு இல்லாதமையே இதற்கு நேரடிக் காரணம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் குறிப்பிட்டார். அத்துடன் எதிர்க்கட்சி என்ற வகையில் அதிகாரம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் நாட்டுக்கு சேவை செய்வோம் என்றும், ஹூஸ்ம திட்டத்தின் ஊடாகவே 74 ஆண்டுகளுக்குப் பிறகு செயற்திறன்மிக்க எதிர்க்கட்சியொன்று உருவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆரோக்கியமான தேசத்தை கட்டியெழுப்பும் நோக்கில் ஜன சுவய மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் மூச்சு வேலைத்திட்டங்கள் செயல்படுத்தப்படுவதோடு, இதன் பிரகாரம் இருதய நோய்களுக்கான இன்றியமையாத மருந்தான Recombinant Streptokinase (IP 1500000IU) என்ற தடுப்பூசிக்கு நாட்டில் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்திருந்தார். இது குறித்து மே 18, 2022 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் விசேட அவதானம் செலுத்தப்பட்டது. இந்நாட்டில் மேற்குறிப்பிட்ட மருந்துகளின் கையிருப்பு குறைவாக இருப்பதாகவும், முடிந்தால் "ஹூஸ்ம" திட்டத்தின் மூலம் குறித்த மருந்துகளை இறக்குமதி செய்து தருமாறு பிரதமர் சவால் விடுத்த வன்னம் கோரியிருந்தார்.

இந்நாட்டிலுள்ள மக்களின் வாழ்க்கையைப் பாதுகாக்கும் பாரிய பொறுப்பு எமக்கு உள்ளதோடு, முடிந்தவரை அதனை நிறைவேற்றுவதற்கு நாங்கள் தயாராகவும் உள்ளோம். இதன்படி குறித்த மருந்துகளை இறக்குமதி செய்வதற்காக முன்னெடுத்த முயற்சிக்கு பலன் சேர்க்கும் வகையில் எதிர்க்கட்சித் தலைவரின் நிறைவேற்று ஒருங்கிணைப்பாளர் திரு.நயன வாசலதிலக அவர்களின் பூரண ஆதரவுடன், 15.6 மில்லியன் ரூபா ($42,840) பெறுமதியான Recombinant Streptokinase (IP 1500000IU) என்ற 4000 தடுப்பூசிகள் விசேட மருத்துவ நிபுணர் அன்வர் ஹம்தானிக்கு நேற்று(06) எதிர்க்கட்சித் தலைவர் நன்கொடையாக வழங்கி வைத்தார்.

ரீகாம்பினன்ட் ஸ்ட்ரெப்டோகினேஸ் (Recombinant Streptokinase) என்பது வாழ்க்கைக்கும் இறப்புக்கும் இடையே ஒரு சிக்கலான சூழ்நிலையை எதிர்கொள்ளும் இருதய நோயாளிகளின் உயிரைக் காப்பாற்ற இன்றியமையாது உதவும் ஒரு மருந்தாகும். வாழ்வாதாரத்துக்குப் போராடும் மக்களுக்கு சுகாதார ரீதியான நிவாரணம் வழங்குவதற்காக, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், தொகுதி அமைப்பாளர்கள், அங்கத்தவர்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் வெளிநாட்டுக் கிளைகள், உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் உள்ள ஆதரவாளர்கள் மற்றும் "ஜனசுவய" செயற்திட்டமும் இணைந்து "ஐக்கிய மக்கள் சக்தியிடமிருந்து ஓர் மூச்சு" திட்டம் செயல்படுத்துகிறது. இந்நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் கோவிட் தொற்றுக்குள்ளான சந்தர்ப்பத்தில் அவருக்கு சிகிச்சையளித்த வைத்தியர்கள் குழாமும் இணைந்துகொண்டனர்.

## பிஷப்களை தேர்வு செய்யும் குழுவில் பெண்கள்

வாடிகனின் நிர்வாகத் துறைகளில் பெண்களுக்கு முக்கிய பங்கு அளிக்கப்பட்டு வருகிறது. வாடிகனில் கடந்த மாதம் அமுலுக்கு வந்த புதிய அரசியல் சாசனம் குறித்து விளக்கம் அளித்தார் போப்.

போப் பிரான்சிஸ், ரொய்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில், வாடிகன் நிர்வாகத்தில் பெண்களுக்கு முக்கிய பொறுப்புகளை அளிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். பிஷப்களை தேர்வு செய்யும் குழுவில் தற்போது ஆண்கள் மட்டுமே இருப்பதாகக் குறிப்பிட்ட அவர், இக்குழுவில் பெண்களுக்கு வாய்ப்பளிக்க விரும்புவதாகத் தெரிவித்தார். விரைவில் இக்குழுவில் 2 பெண்கள் இடம் பெறுவார்கள் என்றும் இதன்மூலம் இந்த பாதையில் வழிகள் கொஞ்சம் திறக்கப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், இதற்கான முடிவு இன்னும் அதிகாரப்பூர்வமாக எடுக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். வாடிகனின் நிர்வாகத் துறைகளில் பெண்களுக்கு முக்கிய பங்கு அளிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்த போப் பிரான்சிஸ், வாடிகனின் நீதி மற்றும் அமைதிக்கான துறையின் 2ம் நிலை தலைவராக சகோதரி அலீஸ் ஸாந்தரா ஸ்மெரில்லி கடந்த ஆண்டு தேர்வு செய்யப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

வாடிகனில் கடந்த மாதம் அமுலுக்கு வந்த புதிய அரசியல் சாசனம் குறித்து விளக்கம் அளித்தார்.

